சமூக ஊடக காணொலி
தலைவர் ரசல் எம்.நெல்சன்
மார்ச் 26, 2020

ஒரு மருத்துவராகவும் அறுவை சிகிச்சை நிபுணராகவும், கோவிட் -19 பரவுவதைத் தடுக்க, மருத்துவ வல்லுநர்கள், விஞ்ஞானிகள் மற்றும் முழுநேரமும் பணியாற்றும் அனைவர் மீதும் எனக்கு மிகுந்த அபிமானம் உண்டு. நானும் விசுவாசமுள்ள மனிதன்தான், இந்த சவாலான காலங்களில், தேவனையும் அவருடைய குமாரனாகிய, இயேசு கிறிஸ்துவாகிய, தேர்ந்த குணமாக்குபவரை நாம் அழைக்கும்போது, நாம் பலப்படுத்தப்பட்டு உயர்த்தப்படலாம் என்பதை நான் அறிவேன்.

இந்த உலகளாவிய தொற்றுநோயிலிருந்து நிவாரணம் பெற ஜெபிக்கும்படியாக, ஆரோக்கியம் அனுமதிக்கிற உங்கள் அனைவரையும் உலகளாவிய உபவாசத்தில் என்னுடன் சேர நான் அழைக்கிறேன். இந்த மார்ச் 29, ஞாயிற்றுக்கிழமையில் உபவாசமிருந்து ஜெபிக்க எல்லா இடங்களிலுமுள்ள, பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபையின் அங்கத்தினர்களையும், அவர்களுடன் நமது அநேக நண்பர்களையும் நான் அழைக்கிறேன். உலகம் முழுவதிலும் சரீர மற்றும் ஆவிக்குரிய குணப்படுத்துதலுக்காக மன்றாட நம்முடைய விசுவாசத்தை ஒன்றிணைப்போமாக.

நீங்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் உணர்வுகளை கர்த்தர் புரிந்துகொள்கிறார். என்னைப்போலவே அவர் உங்களை நேசிக்கிறார், கவனித்துக்கொள்கிறார்.